



நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 121 26.10.2025 SUNDAY IPPASI : 9 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 121 26.10.2025 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி : 9 விலை : ரூ.5/-



3 கரூரில் உயிரிழந்தோர் குடும்பத்தினரை மாமல்லபுரம் விடுதியில் விஜய் சந்திக்க ஏற்பாடு

4 குமரியில் சூறைக்காற்றுடன் மழை: தாமிரபரணி, கோதையாறு பகுதிகளில் வெள்ள அபாய எச்சரிக்கை

2 மழைக் காலத்தில் ஃப்ளூ, டெங்கு பாதிப்பு வராமல் தடுப்பது எப்படி?


# தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு இளைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது: பிரதமர் நரேந்திர மோடி பேச்சு

புதுடெல்லி: அக்.26-

இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான பணியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு ஈடுபட்டு வருகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இளைஞர்களுக்கு அரசு பணி ஆணையை வழங்கும் 17வது ரோஜ்கர் மேளா ஜார்க்கண்ட் மாநில ராஞ்சியில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடியின் பேச்சு ஒலிபரப்பப்பட்டது. அதில் பிரதமர் நரேந்திர மோடி கூறியிருப்பதாவது:

நாட்டில் இளைஞர்களுக்கு வழிகாட்டும் சிறந்த அரசாக பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு செயல்பட்டு வருகிறது. இளைஞர்களுக்கு மத்திய அரசின் வேலையை வழங்குவதற்கான பணி ஆணைகள் வழங்கப்பட்டு வருகிறது. 17வது ரோஜ்கர் மேளாவில் 51 ஆயிரம் பேருக்கு பணியாணைகள் வழங்கப்பட்டுள்ளன.



தே.ஜ. கூட்டணி அரசு இளைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. நாட்டின் வெளியுறவுக் கொள்கை கூட இளைஞர்களின் நலனைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டது.

இந்த நம்பிக்கையுடனும், கொள்கையுடனும், நாங்கள் ஒவ்வொரு துறையிலும் முன்னேறி வருகிறோம். நமது ராஜதந்திர ஈடுபாடுகளும் உலகளாவிய ஒப்பந்தங்களும் இளைஞர் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் அதிக கவனம் செலுத்தி வருகின்றன.

ரோஜ்கர் மேளா மூலம் இதுவரை 11 லட்சம் பேருக்கு அரசு பணியாணைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இந்தியாவில் நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள், நிறுவனங்கள் அமைப்பதற்காக பிரேசில், சிங்கப்பூர், தென் கொரியா, கனடா உள்ளிட்ட நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இதன்மூலம் நாட்டின் ஏற்றுமதி வலுப்படும். பல்வேறு துறைகளும் வளர்ச்சி அடையும். இந்த வேலைவாய்ப்புகளை இளைஞர்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஜிஎஸ்டியில் அண்மையில் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்கள் மூலம் மிகப்பெரிய மறுமலர்ச்சி ஏற்படும். இதனால் நாட்டு மக்களின் பணம் சேமிக்கப்படும். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.




## காந்திகிராமம் பல்கலைக்கழக புவிசார் தகவல் தொழில்நுட்ப மையம் சார்பாக ஜியோபார்லே25 நிகழ்ச்சி

### பல்கலை துணைவேந்தர் என்.பஞ்சநதம் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்

சின்னாளபட்டி, அக்.26

காந்திகிராமம் பல்கலைக்கழக புவிசார் தகவல் தொழில்நுட்ப மையம் சார்பாக ஜியோபார்லே25 நிகழ்ச்சி வெள்ளிவிழா அரங்கில் நடைபெற்றது. பல்கலை துணைவேந்தர் என்.பஞ்சநதம் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

திண்டுக்கல் மாவட்டம் காந்திகிராமம் நிகர்நிலை பல்கலைகழகத்தில் உள்ள புவிசார்தகவல் தொழில்நுட்ப மையம் சார்பாக ஜியோபார்லே25 நிகழ்ச்சி பல்கலை வெள்ளிவிழா அரங்கத்தில் நடைபெற்றது. பல்கலை புவிசார் தகவல் தொழில்நுட்ப மைய இயக்குநர் முனைவர்.எம்.முத்துகுமார் தலைமை தாங்கினார் மூத்த பேராசியரும், சுகாதாரதுறை மற்றும் ஊரக வளர்ச்சி புலத்தின் முனைவர்.பாலகிருஷ்ணன், முன்னால மாணவர் மணிகண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட பல்கலை துணை வேந்தர் என்.பஞ்சநதம் புவிசார் தகவல் தொழில்நுட்ப மையத்தின் ஜியோபார்லே25 நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். 10க்கும் மேற்பட்ட கல்லூரியை சேர்ந்த மாணவ மாணவியர்கள் கலந்துகொண்டனர். அவர்களுக்கு ஓவியபோட்டி, புதையல் வேட்டை, வினாடிவினா, கட்டுரை, மற்றும் ஆய்வு கட்டுரை விவரிப்பு போட்டிகள் நடத்தபட்டன. இளநிலை மற்றும் முதுநிலை என இருபிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன. பரிசளிப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பல்கலை துணைவேந்தர் என்.பஞ்சநதம் சான்றிதழ்களையும், பரிசுகளையும் வழங்கினார். புள்ளிகளின் அடிப்படையில் முதுநிலை பிரிவில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் முதல் பரிசையும், இளநிலை பிரிவில் உதகமண்டலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல் பரிசை பெற்றனர். நிறைவாக புவிசார் தகவல் தொழில்நுட்ப மையம் இரண்டாம் ஆண்டு மாணவர் அபிசேக் நன்றி கூறினார்.


## மாணவர் பத்திரிகையாளர் திட்டம்

பத்திரிகை துறையில் சாதிக்க வேண்டும் என்ற கல்லூரி மாணவ, மாணவியர்களுக்காக....

உங்களுக்கோர் அரிய வாய்ப்பு!

சமூகத்தில் அன்றாடம் நிகழும் கொடுமைகள், பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் அநீதிகள் மற்றும் சட்ட விதிமுறைகளுக்கு எதிராக அரங்கேறும் செயல்பாடுகள்,

தங்கள் பகுதிகளில் இது போல் நடக்கும் சட்டத்திற்கெதிரான சம்பவங்களையும், அடிப்படை உரிமைகள் கிடைக்கப்பெறாத அவல நிலைகளையும் ""சக்கர வியூகம்"" மாணவர் பத்திரிகையாளர் திட்டத்தில் இணைந்து எங்களுக்கு அனுப்புங்கள்

உண்மை தன்மையறிந்து பிரசுரிக்கப்படும்

எனவே, பத்திரிகை துறையில் சாதிக்க வேண்டும் என்ற கனவிலுள்ள மாணவ, மாணவியர் கீழ்க்கண்ட விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து சக்கர வியூகம் பத்திரிகை முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப படிவத்திற்கு ஸ்கேன் செய்யவும்.



FOUNDER / EDITOR
SAKKRA VIYUGAM INVESTIGATE DAILY
HO: #70/53 A1, THILAGAR NAGAR 1ST ST,
ANUPPARPALAYAM, TIRUPPUR-641652
WWW.SAKKRAVIYUGAM.COM
88705 00000


## அவினாசி - மேட்டுபாளையம் சாலை விரிவுவாக்க பணிகள் தொழில் வணிக இயக்குநர் இல.நிர்மல்ராஜ்நேரில் ஆய்வு

திருப்பூர், அக்.26-

அவினாசி ஸ்ரீ மேட்டுபாளையம் சாலை விரிவுவாக்க பணிகள் தொழில் வணிக இயக்குநர் இல.நிர்மல்ராஜ்நேரில் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல.நிர்மல்ராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானாலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது.




அந்த வகையில் அவிநாசி வட்டம், வேலாயுதம்பாளையம், நம்பியாம்பாளையம் மற்றும் சுண்டக்காம்பாளையம் ஆகிய பகுதிகளில் அவினாசி ஸ்ரீமேட்டுபாளையம் சாலை விரிவுபடுத்தும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது திருப்பூர் மாவட்ட நெடுஞ்சாலைததுறை கோட்ட பொறியாளர் ரத்தினசாமி அவர்கள் உடன் இருந்தார்.

திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், ராக்கியாபாளையம், அம்மாபாளையம் மற்றும் தண்ணீர் பந்தல் பகுதிகளில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு நேரடியாக சென்று வழங்கப்பட்டு வரும் அத்தியாவசியப் பொருட்கள் தொடர்பாகவும், அம்மாபாளையத்தில் ராக்கியாபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு சென்று வழங்கப்பட்டு வரும் அத்தியாவசியப்பொருட்கள் தொடர்பாகவும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து, சாலையபாளையத்தில் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டதையும், அவிநாசி வட்டாட்சியர் அலுவலகத்தில் பொருத்தப்பட்டுள்ள தானியங்கி மழைமாணியை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது, கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் (பொது விநியோகத்திட்டம்) தேவி, மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், அவிநாசி வட்டாட்சியர் சந்திரசேகரன் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

## சின்னாளபட்டி தேவாங்கர் மேல்நிலைப்பள்ளியில் நலன்காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் முகாமை துவக்கி வைத்தார்

### பள்ளி மாணவர்கள், தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள், நெசவாளர்கள் உட்பட 3 ஆயிரம் பேர் பயன்பெற்றனர்

சின்னாளபட்டி, அக்.26

சின்னாளபட்டி தேவாங்கர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலன்காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் முகாமை துவக்கி வைத்தார் முகாமில் பள்ளி மாணவர்கள், தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள், நெசவாளர்கள் உட்பட 3ஆயிரம் பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.



திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சியில் உள்ள தேவாங்கர் மேல்நிலைப்பள்ளியில் நலன்காக்கும் ஸ்டாலின் மருத்துவமுகாம் நடைபெற்றது. முகாமிற்கு பொது சுகாதாரதுறை துணை இயக்குநர் செல்வகுமார் தலைமை தாங்கினார். ஆத்தூர் வட்டாட்சியர் முத்துமுருகன், பேரூராட்சி செயல் அலுவலர்கள் இளவரசி, ஜெயமாலு, பேரூராட்சிமன்ற தலைவர் பிரதீபா, துணைத்தலைவர் ஆனந்தி, பேரூர்கழக திமுக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், பேரூராட்சி துப்புரவு அலுவலர் மணிகண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார மருத்துவ அலுவலர் ஆனந்தீஸ்வரி வரவேற்று பேசினார். சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் முகாமை துவக்கி வைத்து பார்வையிட்டார். சின்னாளபட்டி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், மற்றும் கைத்தறி நெசவாளர்கள், பொதுமக்கள், பள்ளி மாணவர்கள் உட்பட 3ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு உடல் பரிசோதனை செய்துகொண்டனர். முகாமில் கலந்துகொண்டவர்களுக்கு மருந்து மாத்திரைகள் மற்றும் இதர மருந்துகள் வழங்கப்பட்டன. முகாமில் மருத்துவர்கள் சிவகுமார், பவானி, பிரசாந்த், ஹரிபிரசன்னா, வட்டார சுகாதார அலுவலர் முருகன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு சிகிச்சை அளித்தனர். மருத்துவ முகாமில் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக துணை செயலாளர்கள் எம்.சி.பாண்டியன், ராஜேந்திரன், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், இளைஞர் அணி அமைப்பாளர் ராஜகணேஷ், பேரூர்கழக இளைஞர் அணி அமைப்பாளர் வினோத் ஒச்சப்பன், மற்றும் சின்னாளபட்டி பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள், பேரூர்கழக பொறுப்புகுழு உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள் திமுக நிர்வாகிகள், மகளிர் அணியினர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# மழைக் காலத்தில் ஃப்ளூ, டெங்கு பாதிப்பு வராமல் தடுப்பது எப்படி?

தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழைக் காலம் தொடங்கியுள்ளது. இதனால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து வயதினரும் சளி, காய்ச்சல், இருமல் உள்ளிட்ட பல்வேறு உடல் உபாதைகளால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இந்நிலையில், பருவ மழைக் காலங்களில், பல்வேறு விதமான வைரஸ் காய்ச்சல் பாதிப்பில் இருந்து தற்காத்துக் கொள்ளும் வழிமுறைகள் குறித்து மருத்துவ வல்லுநர்கள் பல்வேறு ஆலோசனைகளை வழங்கியுள்ளனர்.


இது குறித்து கோவை மாவட்ட சுகாதாரத்துறை துணை இயக்குநர் பாலுசாமி, கோவை அரசு மருத்துவமனை 'டீன்' கீதாஞ்சலி ஆகியோர் கூறும்போது, "பருவ மழைக் காலம் தொடங்கிய நிலையில் மாவட்டம் முழுவதும் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றுக்கு வரும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

'டெங்கு' கொசுக்கள் தேங்கி நிற்கும் தண்ணீரில் தான் அதிகம் உற்பத்தியாகும். எனவே வீட்டின் சுற்றுப்புற பகுதிகளில் மழை நீர் தேங்காமல் பாரத்துக் கொள்ள வேண்டும். தண்ணீரை காய்ச்சி பருகுவது நல்லது. துரித உணவு வகைகளை தவிர்க்க வேண்டும்.

காய்ச்சல், சளி போன்ற உடல நல பாதிப்பு ஏற்பட்டால் சுயமாக மருத்துகளை உட்கொள்வதை தவிர்த்து மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்து பரிந்துரைக்கப்படும் மருந்துகளை உட்கொள்ள வேண்டும். விழிப்புணர்வுடன் செயல்பட்டால் நோய் பாதிப்பில் இருந்து தற்காத்து கொள்ளலாம்" என்றனர்.

இந்திய குழந்தைகள் மருத்துவ அகாடமி தமிழ்நாடு குழுத் தலைவர் டாக்டர் ராஜேந்திரன் கூறும்போது, "இவ்வாண்டு தற்போது வரை 'டெங்கு' பாதிப்பு அதிகம் இல்லை. 'டெங்கு' பாதிப்பு ஏற்படுத்தும் கொசுக்கள் பெரும்பாலும் காலை 6 முதல் 8 மணி வரையும், மாலை 4 மணி முதல் 6 மணி வரையும் தான் கடிக்கும். குழந்தைகள் கை, கால்கள் முழுவதும் மூடும் வகையிலான ஆடைகளை அணிய வேண்டும். வீட்டின் சுற்றுப்புற பகுதிகளில் தேங்கி நிற்கும் தண்ணீரில் தான் கொசுக்கள் முட்டை வைக்கும்.

'டெங்கு' பாதிப்பு என்றால் தலைவலி, காய்ச்சல் இருக்கும். இதற்கு எலும்பு உடைக்கும் காய்ச்சல் (போன் பிரேக்கிங் பீவர்) என பெயரிடப்பட்டுள்ளது. அதே போல் கண் இமை மேற்புற பகுதிகளில் வலி இருக்கும். தற்போது குழந்தைகள் மத்தியில் ஃப்ளூ, பன்றிக் காய்ச்சல், 'ஆர்எஸ்வி' போன்ற வைரஸ் பாதிப்புகள் காணப்படுகின்றன. அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவரிடம் செல்ல வேண்டும்" என்றார்.





# மழை வெள்ளத்தில் கடும் சேதம்: பழைய குற்றாலம் அருவியில் குளிக்க தடை

தென்காசி, நெல்லை, அக்.26-

தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. நேற்று காலை வரை 24 மணி நேரத்தில் குண்டாறு அணையில் 32 மி.மீ., அடவிநயினார் அணையில் 29 மி.மீ., செங்கோட்டையில் 24 மி.மீ., கடனாநதி அணையில் 16 மி.மீ., கருப்பாநதி அணையில் 19.50 மி.மீ., ஆய்க்குடியில் 12 மி.மீ., சிவகிரியில் 7 மி.மீ., ராமநதி அணை, தென்காசியில் தலா 3 மி.மீ. சங்கரன்கோவிலில் 2 மி.மீ. மழை பதிவானது.

கடனாநதி அணை நீர்மட்டம் 58 அடியாகவும், ராமநதி அணை நீர்மட்டம் 67 அடியாகவும், கருப்பாநதி அணை நீர்மட்டம் 57.75 அடியாகவும், அடவிநயினார் அணை நீர்மட்டம் 123.25 அடியாகவும் இருந்தது. குண்டாறு அணை தொடர்ந்து முழு கொள்ளளவில் உள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் பழைய குற்றாலம் அருவிக்கரை, பிரதான அருவிக்கரை பகுதிகளில் தடுப்புக் கம்பிகள் சேதமடைந்தன. இதனால் இந்த அருவிகளில் குளிக்க விதிக்கப்பட்ட தடை நீடிக்கிறது.

குற்றாலம் பிரதான அருவிக்கரை பகுதியில் ஏற்பட்ட சேதங்களை சரி செய்யும் பணிகள் நடைபெற்று வருவதாகவும், ஒரு சில நாட்களில் பணிகள் முடிந்துவிடும் என்றும் பேரூராட்சி தலைவர் கணேசன் தாமோதரன் கூறினார். பராமரிப்பு பணிகள் முடிந்த பின்னர் பிரதான அருவியில் குளிக்க அனுமதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

இதேபோல் பழைய குற்றாலம் அருவி மூடப்பட்டுள்ளது. இப்பகுதியில் ஆய்வு செய்த மாவட்ட வன அலுவலர் ராஜ்மோகன், "பழைய குற்றாலம் அருவிப் பகுதி வெள்ளத்தால் பெரும் சேதம் அடைந்துள்ளது. அருவியின் கீழ் பகுதியில் அமைந்துள்ள தடுப்பு வேலிகள் முற்றிலும் சேதம் அடைந்துள்ளன. தடுப்புக்கு கீழ் உள்ள சுவரும் சேதமடைந்து காணப்படுகிறது. உடை மாற்றும் அறையின் கதவுகளும், கழிப்பறையின் கதவுகள் மற்றும் கோப்பைகளும் வெள்ளத்தால் சேதம் அடைந்துள்ளன.

கழிப்பறைக்கு செல்லும் பைப் லைன் முற்றிலும் சேதம் அடைந்துள்ளது. அருவிக்கு செல்லும் சாலையின் இருபுறமும் காட்டாற்று வெள்ளத்தால் அரிப்பு ஏற்பட்டு மிகப்பெரிய பள்ளம் காணப்படுகிறது. மழைநீர் வடிந்த பின்பு தான் முழுமையான சேதம் மதிப்பு தெரியவரும். தற்போது தண்ணீர் அதிகமாக விழுவதால் சேத மதிப்பை கணக்கிட முடியவில்லை.

எனவே, பொதுமக்களின் நலன் கருதி அருவியில் குளிக்க தடை நீடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப்பகுதியில் வனவிலங்கு நடமாட்டம் இருப்பதால் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வடகிழக்கு பருவமழை தீவிரம் குறைந்தவுடன் தக்க பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் தக்க பாதுகாப்புடன் அருவியில் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்காக அனுமதிக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி: திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பலத்த மழை பெய்துள்ளது. நேற்று காலை 8 மணிவரையிலான 24 மணிநேரத்தில் அதிகபட்சமாக இங்குள்ள நாலுமுக்கு பகுதியில் 118 மி.மீ. மழை பதிவாகியிருந்தது. இதுபோல் ஊத்து பகுதியில் 105, காக்காச்சியில் 80, மாஞ்சோலையில் 52 மி.மீ. மழை பெய்திருந்தது.

மாவட்டத்தில் அணைப்பகுதிகளிலும், பிறஇடங்களிலும் பதிவான மழையளவு (மி.மீட்டரில்) அம்பாசமுத்திரம் 8.40, சேரன்மகாதேவி 3, மணிமுத்தாறு 9.20, நாங்குநேரி 20, பாளையங்கோட்டை 3, பாபநாசம் 31, ராதாபுரம் 29, திருநெல்வேலி 1.80, சேர்வலாறு அணை 11, கன்னடியன் அணைக்கட்டு 10.60, களக்காடு 16.40, கொடுமுடியாறு அணை 43, மூலைக்கரைப்பட்டி 5, நம்பியாறு அணை 14.

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. 143 அடி உச்சநீர்மட்டம் கொண்ட பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 1,847 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 250 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டிருந்தது.

அணை நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்ந்து 98 அடியாக இருந்தது. 118 அடி உச்சநீர்மட்டம் கொண்ட மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 1 அடி உயர்ந்து 97.26 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 854 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணை மூடப்பட்டிருந்தது.

# பழனிசாமியிடம் வயலில் முளைவிட்ட கதிரைத்தான் காட்டினேன்: தஞ்சாவூரைச் சேர்ந்த பெண் விவசாயி விளக்கம்



தஞ்சாவூர், அக்.26-

ஆய்வுக்கு வந்த எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமியிடம், வயலில் சாய்ந்து முளைவிட்ட நெற்கதிர்களைத்தான் காண்பித்தேன் என்று தஞ்சாவூரைச் சேர்ந்த பெண் விவசாயி விளக்கம் அளித்துள்ளார். டெல்டா மாவட்டங்களில் மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களையும், நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படாமல் தேங்கி முளைவிட்டுள்ள நெல்மணிகளையும் பார்வையிடுவதற்காக எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி கடந்த 22ல் தஞ்சாவூருக்கு வந்தார்.

காட்டூர் நெல் கொள்முதல் நிலையத்தில் அவர் ஆய்வு செய்தபோது, வரவுக்கோட்டையைச் சேர்ந்த பூங்கொடி என்ற பெண் விவசாயி, தனது வயலில் அழுகிய நெற்கதிர்களையும், அதில் முளைத்த நெல்மணிகளையும் பழனிசாமியிடம் காண்பித்து, தனது வேதனையைத் தெரிவித்தார்.

இதனிடையே நேற்று முன்தினம் தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் நெல் மூட்டைகளை வேகன்களில் அனுப்பும் பணியைப் பார்வையிட வந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், நெல் கொள்முதல் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி பொய்யான தகவல்களை கூறியுள்ளதாகவும், அவரிடம் நெல் மணிகள் முளைத்துள்ளதை காட்டிய பெண் (பூங்கொடி) குத்தகை சாகுபடி செய்து வருபவர் என்றும், அவர் இன்னும் அறுவடை பணியையே மேற்கொள்ளாத போது, அவர் எப்படி நெல் மூட்டைகளை கொள்முதல் நிலையத்துக்கு கொண்டு வந்தார் என்பது அவருக்குத்தான் வெளிச்சம் என்றும் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து வரவுக்கோட்டையைச் சேர்ந்த விவசாயி பூங்கொடி 'இந்து தமிழ் திசை' செய்தியாளரிடம் கூறியதாவது: நான் 5 ஏக்கரில் குத்தகை சாகுபடி செய்து வருகிறேன். தற்போது அறுவடை செய்யும் தருவாயில் உள்ள குறுவை நெற்கதிர்கள், அண்மையில் பெய்த மழையில் நனைந்து வயலிலேயே சாய்ந்து முளைவிடத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில், காட்டூர் கொள்முதல் நிலையத்துக்கு பழனிசாமி வருவதாகக் கூறியதால், விவசாயிகள் அங்கு சென்றோம். அப்போது நான், எனது வயலில் மழையில் அழுகிய மற்றும் நெல்மணிகள் முளைவிட்ட நெற்பயிரை பழனிசாமியிடம் காண்பித்து, பாதிப்பு குறித்து தெரிவித்தேன். நெல் கொள்முதல் நிலையத்துக்கு கொண்டுவந்த நெல்மணிகள் முளைத்துவிட்டதாக நான் கூறவில்லை. பின்னர், வேளாண்மை, வருவாய்த் துறை அதிகாரிகள் எனது வயலைப் பார்வையிட்டனர்.

அப்போது வயலிலேயே முளைவிட்ட நெற்கதிர்களை படம் பிடித்தனர். நான் ரூ.1.5 லட்சம் செலவு செய்து சாகுபடி செய்தேன். தற்போது அறுவடை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அறுவடையை முடித்து, அதில் கிடைக்கும் வருவாயைக் கொண்டு, மழையில் ஒழுகும் கூரை வீட்டை சரி செய்ய வேண்டும் என்று கருதியிருந்தேன். ஆனால், மழையில் நனைந்து நெல்மணிகள் முளைத்துள்ளதால், வேதனையாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# பயிர் பாதிப்புகளை ஆய்வு செய்ய வரும் மத்தியக் குழு தமிழக விவசாயிகளுக்கு உதவும்: நயினார் நாகேந்திரன் உறுதி



மதுரை, அக்.26-

பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் மதுரை விமான நிலையத்தில் செய்தியா ளர்களிடம் நேற்று கூறியதாவது: நெல் கொள்முதல் குறித்து எந்த விவசாயியும் புகார் செய்யவில்லை என்று துணை முதல்வர் உதயநிதி கூறுகிறார்.

யார் மீது புகார் கொடுக்க முடியும்? மூட்டைக்கு ரூ.40 கமிஷன் கேட்கின்றனர். தமிழகம் முழுவதும் விவசாயத்துக்காக ரூ.5 ஆயிரம் கோடி செலவு செய்ததாக சொல்கிறார்கள்.

எங்கே செய்தனர் என்பதுதான் கேள்வியாக உள்ளது. தமிழகத்தில் பயிர் பாதிப்புகளை ஆய்வு செய்ய வரும் மத்தியக் குழு, பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உதவி செய்யும். இவ்வாறு அவர் கூறினார்.




# 10, 12 பொதுத் தேர்வு கால அட்டவணை நவ. 4ல் வெளியீடு?

சென்னை, அக்.26-

தமிழகத்தில் 10, பிளஸ் 2 வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகால அட்டவணை அக்டோபரில் வெளியாகும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், தயாரிப்புப் பணிகளில் தாமதம் ஏற்பட்டதால் அட்டவணை நவம்பர் முதல் வாரத்தில் வெளியாக உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து தேர்வுத்துறை அதிகாரிகள் கூறும் போது, "அட்டவணை தயாரிப்பு பணிகள் முடிந்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்ததும், நவ.4ல் வெளியிட திட்டமிட்டுள் ளோம். அடுத்தாண்டு நடைபெறும் தேர்தலை கருத்தில் கொண்டு தேர்வு தேதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன" என்றனர்.




# அக்.27ம் தேதி சென்னை, திருவள்ளூர், ராணிப்பேட்டை மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கை: வானிலை மையம் தகவல்

சென்னை, அக்.26-

சென்னை, திருவள்ளூர், ராணிப்பேட்டை மாவட்டங்களில் அக்.27ம் தேதி மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழ்நாட்டில் இன்று 12 மாவட்டங்களில்

கனமழைக்கு வாய்ப்புள்ளது. குமரி, நெல்லை, தென்காசி, தேனி, திண்டுக்கல், கோவை, நீலகிரி, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி அறிவித்ததும் அனைத்துக் கட்சி கூட்டத்தை நடத்த திட்டம்

சென்னை, அக்.26-

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி குறித்த அறிவிப்பு எப்போது வேண்டுமானாலும் வெளியாக லாம் என்பதால், தேவையான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருப்பதாக தமிழக தேர்தல் துறை கூறியுள்ளது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: தமிழகத்தில் எஸ்ஐஆருக்கான தேதி எப்போது வேண்டுமானாலும் அறிவிக்கப்படலாம். அதற்காக தயார் நிலையில் உள்ளோம். அறிவிக்கப்பட்டதும் முதல்கட்டமாக தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட மற்றும் வாக்காளர் பதிவு அதிகாரி நிலையில் அனைத்துக்கட்சி கூட்டங்கள் நடத்தப்படும். வழக்கமான வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகள் போல் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படமாட்டாது. சிறப்பு முகாம்களும் கிடையாது.

இதற்கான புதிய வழிகாட்டுதலை ஆணையம் வெளியிடும். இந்த எஸ்ஐஆரின்போது இந்தாண்டு ஜனவரியில் வெளியான இறுதி வாக்காளர் பட்டியல், 200203ல் வெளியான வாக்காளர் பட்டியல் ஆகியவை அடிப்படையில் பணிகள் நடைபெறும். 200203க்கான பட்டியல் தேர்தல் ஆணைய இணையதளத்தில் உள்ளது. தமிழகத்தில் தற்போது 68,467 வாக்குச்சாவடிகள் உள்ளன. இனி 1,200 வாக்காளருக்கு ஒரு வாக்குச்சாவடி அமைக்கப்படுவதால், இதன் எண்ணிக்கை 75,050 ஆக உயரும். எஸ்ஐஆர் தொடங்கப்பட்டதும், வீடுவீடாகச் சென்று விண்ணப்ப படிவங்களை வாக்குச்சாவடி அலுவலர்கள்வழங்குவார்கள். இதற்காக 90 ஆயிரம் பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். படிவங்களை பூர்த்தி செய்து, அலுவலர்கள் மீண்டும் வரும்போது வழங்க வேண்டும். விண்ணப்ப படிவத்துடன், இந்திய குடிமகன் என்பதை நிரூபிக்கும் வகையில் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள 11 ஆவணங்களில் ஏதேனும் ஒன்று மற்றும் ஆதார் எண்ணை வழங்கலாம். எஸ்ஐஆரின்போது, இறந்த வர் பெயர், ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் உள்ள பெயர்கள் நீக்கப்படும். இப்பணிகள் டிசம்பருக்குள் முடிக்கப்பட்டு இறுதி வாக்காளர் பட்டியல் ஜனவரியில் வெளியாகும். வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கப்பட்டால் அதற்கான நோட்டீஸ் வழங்கப்படும். அப்போது, ஆணையம் தெரிவிக்கும் ஆதார ஆவணங்களை சமர்ப்பித்து மீண்டும் பெயரை சேர்க்கலாம்.



# பெரம்பூரில் ரூ.9.64 கோடியில் வணிக வளாகம்: அமைச்சர் கே.என்.நேரு அடிக்கல் நாட்டினார்

சென்னை, அக்.26-

பெரம்பூர் ஜமாலியா பகுதியில் ரூ.9.64 கோடியில் புதிய வணிக வளாகம் கட்டும் பணியை அமைச்சர் கே.என்.நேரு அடிக்கல் நாட்டி தொடங்கிவைத்தார். சென்னை மாநகராட்சி திரு.வி.க.நகர் மண்டலம், 76வது வார்டு குயப்பேட்டையில் உள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் சிங்காரச் சென்னை 2.0 திட்ட நிதியில் ரூ.5.96 கோடியில் பள்ளி கட்டிடம் புதிதாக கட்டப்பட்டுள்ளது.

1,473 ச.மீ. பரப்பளவில் தரைதளம் மற்றும் 2 தளங்களுடன் கட்டப்பட்டுள்ளது. தரை தளத்தில் 6 வகுப்பறைகளும், முதல் தளத்தில் 7 வகுப்பறைகளும், 2ம் தளத்தில் அறிவியல், இயற்பியல் ஆய்வகங்கள், நூலகம் மற்றும் கலையரங்கம் ஆகியவை அமைக்கப்பட்டுள் ளன. புதிய கட்டிடத்தை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று திறந்துவைத்தார்.

பள்ளியில் பயிலும் 354 மாணவர்களுக்கு புத்தகப்பை, குடிநீர் பாட்டில், நோட்டுப் புத்தகம் மற்றும் பேனா உள்ளிட்ட தொகுப்பை வழங்கினார். இதைத்தொடர்ந்து, 74 வது வார்டு, பெரம்பூர் ஜமாலியா பகுதியில் மாநகராட்சியின் மூலதன நிதியில் ரூ.9.64 கோடியில் புதிய வணிக வளாகம் கட்டும் பணிக்கு அமைச்சர் அடிக்கல்நாட்டினார். இந்த வளாகத்தில் ஏற்கெனவே பழுதடைந்த நிலையில் இருந்த கட்டிடத்தை இடித்து அகற்றிவிட்டு, புதியதாக வணிக வளாகம் 2,371 ச.மீ. பரப்பளவில் கட்டப்படவுள்ளது.

# இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் 82 ஆயிரம் மாணவர்கள் விண்ணப்பம்: அக்.31ல் குலுக்கல்

சென்னை, அக்.26-

நடப்பாண்டு இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி (ஆர்டிஇ) சேர்க்கைக்கு 82,016 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். இதற்கான குலுக்கல் தேர்வு முறை அக்.31ல் நடைபெறும் என பள்ளிக்கல்வித் துறை தெரிவித்துள்ளது.

இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி தனியார் பள்ளிகளில் 25 சதவீத இடங்களில் ஏழைக் குழந்தைகள் சேர்க்கப்படுவார்கள். இதன்படி, தமிழகத்தில் இதுவரை 5 லட்சம் குழந்தைகள் தனியார் பள்ளிகளில் படிக்கின்றனர். இந்த திட்டத்துக்கான நிதியை மத்திய அரசு வழங்காததால், 2025-26ம் கல்வியாண்டுக்கானமாணவர் சேர்க்கையை பள்ளிக்கல்வித் துறை நிறுத்தி வைத்திருந்தது. இதுகுறித்த வழக்கில் உயர் நீதிமன்றமும் உச்ச நீதிமன்றமும் அறிவுறுத்தியதை யடுத்து மத்திய அரசு நிதியை விடுவித்தது. இதையடுத்து பள்ளிகளில் ஏற்கெனவே சேர்க்கப்பட்ட மாணவர்களில் தகுதியானவர்களை ஆர்டிஇ ஒதுக்கீட்டில் பதிவு செய்ய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, மாநிலம் முழுவதும் உள்ள 7,717 பள்ளிகளில் எல்கேஜிவகுப்பில் 81,927 குழந்தைகளும், ஒன்றாம் வகுப்பில் சேர 89 பேரும் விண்ணப்பித்தனர்.

இதுகுறித்து பள்ளிக்கல்வித்துறை செயலர் பி.சந்திரமோகன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: ஒதுக்கப்பட்ட இடங்களைவிட விண்ணப்பங்கள் குறைவாக உள்ள பள்ளிகளில் தகுதியுள்ள மாணவர்களின் சேர்க்கை அக். 30ல் நடைபெறும். ஒதுக்கீட்டைவிட அதிக விண்ணப்பங்கள் வந்த பள்ளிகளில் தலைமை ஆசிரியர் மற்றும் பெற்றோர் முன் குலுக்கல் முறையில் அக்.31ம் தேதி மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். இந்த சேர்க்கை செயல் முறை பள்ளிக்கல்வித் துறை வலைத்தளம் மூலம் வெளிப்படையாக செயல்படுத்தப்படுகிறது இதை மாவட்டக் கல்வி அலுவலர்கள், கண்காணிப்புக் குழுக்கள் மேற்பார்வையிடுவார்கள். ஆதரவற்றோர், எச்ஐவி பாதித்தோர், 3ம் பாலினத்தவர், மாற்றுத்திறனாளிகள், துப்புரவுத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



■ திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட தென்னம்பட்டி ஊராட்சியில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் அமைக்கப்பட்ட, தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# கரூரில் உயிரிழந்தோர் குடும்பத்தினரை மாமல்லபுரம் விடுதியில் விஜய் சந்திக்க ஏற்பாடு

சென்னை, அக்.26-

கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்த 41 பேரின் குடும்பத்தினரை விஜய் திங்கள்கிழமை தனித்தனியாக சந்திக்கிறார். மாமல்லபுரத்தில் உள்ள தனியார் விடுதியில் இதற்கான ஏற்பாடுகளை தவெக நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

முன்னதாக, கரூரில் உள்ள மண்டபத்தில், பாதிக்கப்பட்டோரை வரவழைத்து அவர்களை சந்திக்க விஜய் திட்டமிட்டார். இதற்காக, கரூரில் மண்டபங்கள் பார்க்கப்பட்டது. ஆனால், விஜய்யின் சந்திப்புக்கு கரூரில் மண்டபங்கள் கிடைக்க சிக்கல் நீடித்ததால், உயிரிழந்த 41 பேரின் குடும்பத்தினரை சென்னைக்கு வரவழைத்து சந்திக்க முடிவு செய்துள்ளார்.

இதற்காக, பாதிக்கப்ப ட்டோரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தவெக நிர்வாகிகள் பேசியுள்ளனர். முதலில் சென்னை பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்துக்கு அவர்களை அழைத்து வந்து சந்திக்க திட்டமிட்டிருந்த நிலையில், தற்போது அந்த திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, மாமல்லபுரத்தில் உள்ள தனியார் விடுதியில் 41 பேரின் குடும்பத்தினரை சந்திக்க விஜய் முடிவு செய்துள்ளதாக தவெக நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.



மாமல்லபுரம் போர் பாயின்ட் தனியார் விடுதியில் சந்திப்பு நிகழ்ச்சி நாளை மறுதினம் (அக்.27) காலை நடைபெறுகிறது. இதற்காக, 41 பேரின் குடும்பத்தினரையும் மாவட்ட நிர்வாகிகள் மாமல்லபுரத்துக்கு அழைத்து வருகின்றனர். இதற்கான செலவுகள் அனைத்தையும் தவெக ஏற்றுக்கொண்டுள்ளது. அவர்களை தங்க வைப்பதற்காக, அந்த ஹோட்டலில் 50 க்கும் மேற்பட்ட அறைகளும் முன்வதிவு செய்யப்பட்டுள்ளதாக நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

அங்கு, பாதிக்கப்பட்டவர்களை விஜய் தனித்தனியாக சந்தித்து, அவர்களுடன் பேச இருக்கிறார். கடந்த மாதம் 27ம் தேதி தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த நிலையில், இந்த மாதம் அதே நாளில் அவர்களது குடும்பத்தினரை விஜய் சந்திக்க இருப்பது கவனிக்கத்தக்கது.

முன்னதாக, கரூரில் கடந்த செப்.27ம் தேதி விஜய்யின் பிரச்சாரக் கூட்டத்தில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த விவகாரத்தில் விஜய் வீடியோ வெளியிட்டு, உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு இரங்கல் தெரிவித்தார். தொடர்ந்து, சில நாட்கள் கழித்து, பாதிக்கப்பட்டோரிடம் வீடியோ காலில் பேசிய விஜய், நேரில் வருவதாக அவர்களிடம் கூறியிருந்தார்.

இந்நிலையில், கடந்த 18ம் தேதி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் வங்கிக் கணக்குக்கு தவெக சார்பில் தலா ரூ.20 லட்சம் வரவு வைக்கப்பட்டது. மேலும், சட்டரீதியான அனுமதி முன்னெடுப்புகளை எடுத்து வருவதாகவும், அனுமதி கிடைத்ததும் நிச்சயமாகச் சந்திப்போம் எனவும் விஜய் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# திருச்சி உலகநாதபுரம் முத்துமாரியம்மன் கோவிலில் பூட்டை உடைத்து கொள்ளை மர்ம நபர்கள் 3 பேர் தப்பி ஓட்டம்

திருச்சி, அக்.26-

திருச்சி மாவட்டம் உலகநாதபுரம் அருகிலுள்ள முத்துமாரியம்மன் கோவில் பூட்டை உடைத்து, உண்டியல் பணத்தை கொள்ளையடித்துச் சென்ற மூன்று மர்மநபர்களை போலீசார் வலை வீசி தேடி வருகின்றனர்.




திருச்சி டி.வி.எஸ் டோல்கேட் அருகே உள்ளது உலகநாதபுரம். இங்கு முத்து மாரியம்மன் கோவில் உள்ளது.இந்தக் கோவிலில் காலை, மாலை இருவேளையும் சிறப்பு பூஜைகள் நடைபெறுவது வழக்கம். நேற்று முன்தினம் இரவு வழக்கம்போல் பூஜை முடிந்ததும், பூசாரி மற்றும் கோவில் நிர்வாகத்தினர் கோவிலை பூட்டிவிட்டு சென்று விட்டனர். நள்ளிரவில் கோவிலுக்கு வந்த மூன்று மர்ம நபர்கள் பூட்டை உடைத்து உள்ளே சென்றனர். உள்ளே இருந்த உண்டியலை உடைத்து சுமார் 8000 ரூபாய் பணத்தை திருடி சென்று விட்டனர். மறுநாள் காலையில் பூசாரி கோவிலை திறக்க வந்த போது பூட்டு உடைக்கப்பட்டு திருடு போயிருப்பது குறித்து, கோவில் நிர்வாகத்திற்கு பூசாரி தகவல் தெரிவித்தார். தகவலின் பேரில் திருச்சி கன்டோன்மெண்ட் குற்றப்பிரிவு காவல் நிலைய போலீசார் மற்றும் கைரேகை நிபுணர்கள், கோவிலில் உள்ள சி.சி.டி.வி கேமரா காட்சிகள் மூலம் ஆய்வு செய்தபோது, 3 மர்ம நபர்கள் வந்து கோவிலின் பூட்டை உடைத்து, உள்ளே சென்று உண்டியலை உடைத்து பணத்தை திருடி சென்றது தெரியவந்துள்ளது. இதுகுறித்து கண்டோன் மெண்ட் குற்றப்பிரிவு போலீசார் வழக்கு பதிந்து மர்ம நபர்களை வலை வீசி தேடி வருகின்றனர்.




■ திருப்பூர் மாவட்டம் குண்டடம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாமினை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் பார்வையிட்டு, முகாமில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து நலப் பெட்டகங்களை வழங்கினார்கள். உடன் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் பெலிக்ஸ் ராஜா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஜெயந்தி ஆகியோர் உள்ளனர்.




# தனியார் பல்கலைக்கழக திருத்த மசோதாவுக்கு எதிர்ப்பு: திருச்சியில் கல்லூரி ஆசிரியர்கள் கருப்பு சட்டை அணிந்து போராட்டம்

திருச்சி, அக்.26-

கடந்த 17 ந்தேதி அன்று தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட "தனியார் பல்கலைக்கழக சட்டம், 2019" திருத்த மசோதா, ஏழை மற்றும் நடுத்தர வர்க்க மாணவர்களின் உயர் கல்வி வாய்ப்பை பறிக்கும் தன்மையுடனும், தனியார் முதலாளிகளுக்கு ஆதரவானச் சட்டம் எனவும் அமைந்துள்ளதாக சங்கம் குற்றம்சாட்டியுள்ளது. உயர்கல்வி அனைவருக்கும் சம வாய்ப்புடன் கிடைக்க வேண்டிய சூழலை பாதிக்கும் இந்த மசோதா, சமூக நீதி என்ற கல்வியின் அடிப்படை தத்துவத்தை பாதிக்கும் அபாயம் கொண்டதாக ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

மேலும், இந்த மசோதா நடைமுறைக்கு வந்தால், பேராசிரியர்களின் பணி பாதுகாப்பு கேள்விக்குறியாகும் நிலை உருவாகும் என்றும், மாணவர் பெற்றோர், ஆசிரியர் நலன்கள் பாதிக்கப்படும் என்றும் சங்கம் தெரிவித்துள்ளது. இதற்கு எதிராக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இன்று தமிழகத்தின் பல கல்லூரிகளில் ஒருங்கிணைந்த வடிவில், கீழ்க்கண்ட மூன்று நிலைப் போராட்டங்கள் நடைபெற்றன அதன்படி இன்று கருப்பு ஆடை அணிந்து பணி செய்தல் மற்றும்

வாயிற் முழக்கப் போராட்டம் நடத்தப்படும் என்று அறிவித்திருந்தனர்.

மேலும் அடுத்தடுத்த வேலை நாட்களிலும் இந்தப் போராட்டம் தொடரும் என்று சங்கம் அறிவித்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக, திருச்சி தேசிய கல்லூரி நுழைவாயிலில் இன்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்க பேராசிரியர்கள் ஒன்று கூடி வாயிற் முழக்கப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்திற்கு மாநிலப் பொதுச் செயலாளர் ராஜா தலைமையேற்றார். மண்டல செயலாளர் சுந்தரவேல் முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல் மாவட்ட அனைத்து பேரூராட்சிகளுக்குட்பட்ட வார்டுகளிலும் சிறப்பு வார்டு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன்

திண்டுக்கல், அக்.26-

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து பேரூராட்சிகளுக்குட்பட்ட வார்டுகளிலும் வருகின்ற 27.10.2025 முதல் 29.10.2025 வரை சிறப்பு வார்டு கூட்டம் நடைபெறவுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், அனைத்து பேரூராட்சிகளிலும் மன்ற வார்டு உறுப்பினர் தலைமையில் உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள பொதுமக்கள் பங்கேற்புடன் வார்டு அளவிலான சிறப்பு கூட்டங்களை 27.10.2025, 28.10.2025 மற்றும் 29.10.2025 ஆகிய தினங்களில் நடத்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி, சிறப்பு வார்டு கூட்டத்தில் பொதுமக்கள் தங்களது வார்டு பகுதியில் அடிப்படை தேவைகளான குடிநீர்

விநியோகம் திடக்கழிவு மேலாண்மை தெருவிளக்கு பராமரிப்பு சாலை பழுதுகள் பூங்காக்கள் பராமரிப்பு மற்றும் மழை நீர் வடிகால் பராமரிப்பு போன்றவற்றில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் மேற்படி சிறப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு எடுத்துரைக்கலாம்.

வார்டு பகுதி பொதுமக்களால் தெரிவிக்கப்படும் பிரதான மூன்று கோரிக்கைகள் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, சம்பந்தப்பட்ட வார்டுகளில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் குடியிருப்போர் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை தெரிவித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் நெல் ஈரப்பதத்தை ஆய்வு செய்யும் மத்தியக்குழு பயணத்திட்டத்தில் மாற்றம்: நாமக்கல் புறப்பட்டு சென்றது

திருச்சி, அக்.26-

நெல் கொள்முதல் செய்யும் அதிகபட்ச ஈரப்பதம் 17 சதவீதம் என்று மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. தற்போது தமிழகத்தில் பலத்த மழை பெய்து வருவதால், ஈரப்பதத்தின் அளவை 22 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று தமிழக அரசு தரப்பில் கோரிக்கை எழுந்தது. இதையடுத்து, ஈரப்பதத்தின் அளவை ஆய்வு செய்ய உணவுத் துறையின் இருப்பு மற்றும் ஆராய்ச்சி மைய துணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர் தலைமையில் தலா 2 தொழில்நுட்ப அலுவலர்களுடன் 3 குழுக்களை மத்திய அரசு அமைத்தது. 3 குழுக்களும் இணைந்து ஆய்வு செய்து அதன் முடிவுகளை மத்திய அரசிடம் அறிக்கையாக அளிக்கும். இந்த குழுக்கள் நேற்று, இன்று, நாளை ஆகிய 3 நாட்களில் கள ஆய்வு நடத்தும் என்று அறிவிக்கப்பட்டது. முதல் குழு இன்று செங்கல்பட்டு மாவட்டத்திலும், நாளை 26ந் தேதி திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் செல்கிறது. 2வது குழு இன்று தஞ்சை, மயிலாடுதுறையிலும் நாளை.26ந் தேதியில் திருவாரூர், நாகை, அக் 27ல் கடலூர் மாவட்டங்களிலும் ஆய்வு செய்யும் என்றும், 3வது குழுவானது இன்று திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலும், நாளை 26ந்தேதி மதுரை, தேனி மாவட்டங்களிலும் ஆய்வு செய்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில் இன்று தஞ்சை உள்ளிட்ட காவிரி படுகை மாவட்டங்களில் நடைபெறுவதாக இருந்த மத்தியக் குழுவின் ஆய்வு பயணத்தில் தற்காலிகமாக மாற்றம் செய்யப்பட்டு உள்ளது. செறிவூட்டப்பட்ட அரிசி ஆலையை ஆய்வு செய்வதற்காக நாமக்கல்லுக்கு ஒரு குழு சென்றுள்ளது. இதேபோன்று கோவையில் ஆய்வு நடத்த திருச்சியில் இருந்து ஒரு மத்திய குழு புறப்பட்டு சென்றது.

# சென்னையில் இருந்து கோலாலம்பூர் புறப்பட்ட ஏர் ஏசியா விமானம் மீது பறவை மோதியதால் பரபரப்பு

மீனம்பாக்கம், அக்.26-

சென்னையில் இருந்து மலேசிய தலைநகர் கோலாலம்பூருக்கு ஏர் ஏசியா பயணிகள் விமானம், நேற்று நள்ளிரவு 11.50 மணிக்கு புறப்பட்டது. விமானத்தில் 182 பயணிகள், 8 விமான ஊழியர்கள் என 190 பேர் இருந்தனர். விமானம் வானில் பறக்க தொடங்கியபோது முன்பகுதியில் ஒரு பறவை திடீரென மோதி, இன்ஜின் பகுதிக்குள் புகுந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த விமானி, உடனடியாக சென்னை விமான நிலைய கட்டுப்பாட்டு அறைக்கு தெரிவித்து விவரத்தை கூறினார். இதையடுத்து உடனடியாக விமானம், சென்னையில் தரை இறக்கப்பட்டு ஒதுக்கு புறமான இடத்தில் நிறுத்தப்பட்டது. பின்னர் விமான பொறியாளர்கள் குழுவினர், விமானத்தை ஆய்வு செய்தனர். அப்போது, உடனடியாக விமானத்தை சீரமைக்க தாமதமாகும் என தெரியவந்ததால் பயணிகள் அனைவரும் கீழே இறக்கப்பட்டு சென்னை நகரில் உள்ள பல்வேறு ஓட்டல்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து விமானத்தை பழுது பார்க்கும் பணியில் பொறியாளர் குழுவினர் ஈடுபட்டுள்ளனர். இன்று மாலை 4.30 மணியளவில் விமானம் புறப்பட்டு செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பயணிகள் தவித்து வருகின்றனர். இந்த சம்பவம் குறித்து, விரிவான விசாரணை நடத்தும்படி டெல்லியில் உள்ள சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.



■ மதுரை மாவட்டம், கிழக்கு வட்டம், அழகர்கோயில் பொய்கைகாரப்பட்டி கிராமத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையில் மூலம் வேளாண் உட்கட்டமைப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.2 கோடி மதிப்பில் மானியத்தில் கடனுதவி பெற்று அமைக்கப்பட்ட தேனீ வளர்ப்பு மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். தேனீ வளர்ப்பு மையம் ஜேஸ்பின், உடன் உள்ளார்.



# தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் மதுரை மாவட்டத்தின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்


மதுரை, அக்.26-

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் மதுரை மாவட்டத்தின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில், கோயமுத்தூரில் முப்பெரும் விழா வருகின்ற 01.11.2025 சனிக்கிழமை அன்று நடைபெறும் விழாவில் மதுரை மாவட்டத்தின் சார்பாக அ. இளங்கோ மாவட்ட தலைவர் தலைமையில் மாவட்ட,வட்டக் கிளை நிர்வாகிகள் மற்றும் உறுப் பினர்கள் அனைவரும் கலந்து கொள்ள தீர்மானிக் கப் பட்டுள்ளது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநில, மாவட்ட, வட்டக்கிளை, நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் மாநில நிர்வாகிகள் சண்முகசுந்தரம், ஆதி.குமார், மாவட்ட,வட்டகிளை நிர்வாகிகள் சசி குமார், ரபீக் ராஜா, இரத்தினவேல், சரவணகுமார், சங்கீதா, செந்தில்குமார், உமா மகேஸ்வரி, முத்துக் குமார், கிழக்கு வட்டக் கிளைத் தலைவர் தவமணி, பேரையூர் வட்டக்கி ளை செயலாளர் சந்தானம், மற்றும் ராஜேஷ் ,ரவி ஆகியோர் உள்ளனர்.

# திருப்பூரில் "மகிழ்வித்து மகிழ்" அறக்கட்டளை சார்பாக நடைபெற்ற மாற்று திறனாளிகள் திருமணம்

திருப்பூர், அக்.26-

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் மாற்று திறனாளிகள் எங்கு இருந்தாலும் அவர்களுக்கு எந்த உதவி தேவைப்பட்டாலும் மகிழ்வித்து மகிழ் அறக்கட்டளை சார்பாக வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தை சேர்ந்த மாற்று திறனாளிகளான மணமகன் பாலாஜி மணமகள் வைஷ்ணவி ஜோடிகளுக்கு, மகிழ்வித்து மகிழ் அறக்கட்டளை சார்பாக தாலிக்கு தங்கம், பட்டு வேஷ்டி, சர்ட். பட்டு புடவை என மணமக்களுக்கு வழங்கி சிறப்பாக திருமணத்தை நடத்தி வைத்தனர். மகிழ்வித்து மகிழ் அறக்கட்டளைக்கு புது திருமண தம்பதிகள் தங்களது நன்றிகளை தெரிவித்தனர்.




# சாதிவாரி கணக்கெடுப்பு: தமிழக முதல்வரின் தயக்கமும், கூட்டணிக் கட்சிகளின் மவுனமும் அன்புமணி சாடல்

சென்னை, அக்.26-

தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த முதல்வர் ஸ்டாலின் தயங்கி கொண்டிருப்பது ஏன்? இது குறித்து முதல்வர் நிச்சயம் பதிலளிக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களைச் சந்திக்கும்போது கூறியதாவது: தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த முதல்வர் ஸ்டாலின் தயங்கிக் கொண்டிருக்கிறார். இது குறித்து நிச்சயமாக அவர் பதிலளிக்க வேண்டும். முதல்வர் தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுக்கப்பு நடத்தாமல் இருப்பது தமிழக மக்களுக்கு செய்யக்கூடிய மிகப்பெரிய துரோகம்.



கர்நாடகா, பிஹார் உயர் நீதிமன்றங்களும், உச்ச நீதிமன்றமும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தலாம் என கூறிய பிறகும் முதல்வர் தயங்குவது ஏன்? சமூக நீதி எங்கள் பிறப்புரிமை, உயிர் மூச்சு என வசனம் பேசிக் கொண்டிருக்கும் முதல்வர் ஏன் இப்படி செய்கிறார். திமுக கூட்டணியில் உள்ள கட்சிகளும் இது குறித்து கேள்வி எழுப்பாதாது ஏன்?

பெரியார் வழியில் வந்த வைகோ இது குறித்து கேள்வி எழுப்பாமல், அழுத்தம் கொடுக்காமல் இருப்பது ஏன்? முதல்வரிடம் அழுத்தம் கொடுத்து சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டுமென திருமாவளவன் ஏன் அழுத்தம் தரவில்லை? சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தினால், சமூக நீதியை நிலைநாட்டலாம். பின்னர் வறுமை ஒழியும், சாதி பிரச்சினையே ஒழியும். கேட்டால் திராவிட மாடல் என்றார் சொல்வார்கள்.

அப்படி சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தினால் அதிகளவில் பட்டியலின மக்கள் தான் பயனடைவார்கள். திருமாவளவன் ஏன் இன்னும் அமைதியாக இருக்கிறார் கூட்டணிக்காவா? சீட்டுக்காகவா? தேர்தலுக்காகவா? தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை இது குறித்து ஒரு மூச்சு கூட விடவில்லை. திமுக தமிழகத்துக்கு செய்த முதலீடு பொய்தான். கூட்டணி கட்சிகள் ஏன் மவுனம் காக்கிறார்கள்.

தென் மாவட்டங்களில் கனிமவளங்கள் அதிகளில் கேரளாவுக்கு கடத்திச் செல்லப்படுகிறது. இதில் மிகப்பெரிய ஊழல் நடக்கிறது. இது குறித்து அறிக்கைகள் வெளியிட்டோம் ஆனால் அரசு இதை கண்டுகொள்ளவில்லை. தென் மாவட்டத்தில் உள்ள முக்கிய திமுக புள்ளி ஒருவர் தான் இந்த விவகாரங்களுக்கு எல்லாம் 'காட் ஃபாதர்'. தமிழகத்தில் இருந்து ஆயிரக்கணக்கான கனிமவளங்களை கேரளாவுக்கு கடத்தி செல்கிறார்கள். இது அனைவருக்கும் தெரியும். இந்த விவகாரத்தை விசாரிக்க சிபிஐ விசாரணை வேண்டும்.

வேளாண்துறை அமைச்சர் விவசாயிகள் குறித்து கவலைப் படவில்லை. விவசாயிகள் இதற்கு தக்க பாடம் புகட்டுவார்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# குமரியில் சூறைக்காற்றுடன் மழை: தாமிரபரணி, கோதையாறு பகுதிகளில் வெள்ள அபாய எச்சரிக்கை

நாகர்கோவில், அக்.26-

கன்னியாகுமரி மாவட்டத்தில் நேற்று சூறைக்காற்றுடன் கனமழை பெய்தது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 42 அடியை கடந்துள்ளதால் எந்நேரமும் உபரிநீர் திறக்க வாய்ப்புள்ளது. இதனால், வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை கடந்த 10 நாட்களுக்கு மேலாக பெய்து வருகிறது.



நேற்று முன்தினத்தில் இருந்து கனமழை பெய்து வருகிறது. இரவு விடிய விடிய பெய்த மழையால் மாவட்டம் முழுவதும் குளிரான தட்பவெப்பம் நிலவி வருகிறது. நேற்று அதிகாலையில் இருந்து கன மழை வெளுத்து வாங்கியது. மழையின்போது சூறைக்காற்று வீசியதால் குலசேகரம், அருமனை, நாகர்கோவில் மற்றும் பல பகுதிகளில் மரக்கிளைகள் முறிந்து விழுந்தன. பல இடங்களில் மின்கம்பிகளில் மரக்கிளைகள் விழுந்ததால் மின்தடை ஏற்பட்டது.

மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. தென்னை சார்ந்த தொழில், செங்கல் சூளை, உப்பள தொழில் என அனைத்து தரப்பட்ட தொழில்களும் பாதிக்கப்பட்டன. வேம்பனூர் உட்பட பல இடங்களில் இறுதிகட்ட நெல் அறுவடைப் பணி பாதிக்கப்பட்டது. நேற்று காலை 8 மணி வரையான 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக பாலமோரில் 87 மிமீ மழை பெய்தது.

பேச்சிப்பாறை மற்றும் சிற்றாறு 1 அணைப்பகுதியில் தலா 72 மிமீ, பெருஞ்சாணியில் 69, புத்தன்அணையில் 68, திற்பரப்பில் 58, கொட்டாரத்தில் 49, சிவலோகம் மற்றும் சுருளோட்டில் தலா 45, கோழிப்போர்விளையில் 44, மயிலாடி, களியல் மற்றும் நாகர்கோவிலில் தலா 40, குருந்தன்கோட்டில் 38 மிமீ மழை பெய்தது.

இதனால், அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. 48 அடி கொள்ளளவு கொண்ட பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 42.50 அடியாக உயர்ந்தது. அணைக்கு விநாடிக்கு 1,286 கனஅடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து 492 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 67 அடியாக உயர்ந்தது. அணைக்கு 1,597 கனஅடி வந்து கொண்டிருக்கிறது. பிற அணைகளின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது.

பேச்சிப்பாறை அணை வெள்ள அபாய அளவான 42 அடியை நேற்று தாண்டியது. மழையினால் 46 அடியை அடைந்தால், அதற்கு மேல் வரும் உபரிநீர் பேச்சிப்பாறை அணையிலிருந்து கோதையாற்றில் திறந்துவிடப்படும். இந்த தண்ணீர் களியல், திற்பரப்பு, மூவாற்றுமுகம், குழித்துறை, இரயுமன்துறை வழியாக தேங்காப்பட்டினம் கடலை சென்றடையும். எனவே, தாமிரபரணி மற்றும் கோதையாற்றின் கரையோரமாக வசிக்கும் பொதுமக்கள் பாதுகாப்புடன் இருக்குமாறு, குமரி மாவட்ட ஆட்சியர் அழகுமீனா கேட்டுக்கொண்டுள்ளார்.



# டெல்லியில் காற்று மாசுபாட்டை குறைக்க செயற்கை மழை

புதுடெல்லி, அக்.26-

டெல்லியில் மாசுவைக் குறைக்க செயற்கை மழை அவசியம் என்று முதல்வர் ரேகா குப்தா அறிவித்துள்ளார்.

டெல்லியில் நேற்று முன்தினம் கிளவுட் சீடிங் எனப்படும் செயற்கை மழை பரிசோதனை செய்து பார்க்கப்பட்டது. இது தொடர்பாக டெல்லி முதல்வர் ரேகா குப்தா செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது: காற்று மாசுபாட்டை குறைக்கும் நோக்கில் டெல்லியில் நேற்று செயற்கை மழை வெற்றிகரமாக பரிசோதித்துப் பார்க்கப்பட்டுள்ளது.

வானிலை நிலைமைகள் சாதகமாக, குறிப்பாகப் போதுமான மேக அடர்த்தி மற்றும் ஈரப்பதம் இருந்தால், வரும் 29, 30ம் தேதியன்று மேக விதைப்பு விமானம் மூலம் வடமேற்கு டெல்லியில் ஐந்து இடங்களில் முதன்முறையாக செயற்கை மழை சோதனை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. நிலைமைகள் சாதகமாக இருந்தால், அக்டோபர் 29ம் தேதிடெல்லியில் முதல் செயற்கை மழை பெய்யக்கூடும். மாசுபாட்டுக்கு எதிரான டெல்லியின் போராட்டத்தில் இது ஒரு தொழில்நுட்ப மைல்கல்லைக் குறிக்கிறது. இவ்வாறு ரேகா குப்தா தெரிவித்தார்.

# பாகிஸ்தானுக்கு தண்ணீரை தடுக்க புதிய அணை: ஆப்கானிஸ்தான் அரசு அறிவிப்பு

காபூல், அக்.26-

பாகிஸ்தானுக்கு செல்லும் தண்ணீரை தடுக்க குனார் நதியில் புதிய அணை கட்டப்படும் என்று ஆப்கானிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.



பாகிஸ்தானும், ஆப்கானிஸ்தானும் சுமார் 2,640 கி.மீ. எல்லையை பகிர்ந்து கொண்டுள்ளன. எல்லைப் பிரச்சினை காரணமாக அண்மை காலமாக இரு நாடுகளுக்கும் இடையே கடும் சண்டை நடைபெற்று வருகிறது. கத்தார் நாட்டின் சமரசத்தின்பேரில் கடந்த 19ம் தேதி சண்டை நிறுத்தம் அமல் செய்யப்பட்டது. எனினும் இரு நாடுகளின் எல்லைப் பகுதிகளில் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளில் குனார் நதி பாய்கிறது. இந்த நதியின் நீளம் 480 கி.மீ. ஆகும். நதியின் சுமார் 70 சதவீத தண்ணீரை பாகிஸ்தான் பயன்படுத்தி வருகிறது. இதை தடுக்க குனார் நதியில் புதிய அணையை கட்ட ஆப்கானிஸ்தான் அரசு முடிவு செய்திருக்கிறது.

இதுகுறித்து ஆப்கானிஸ்தான் நீர்வளத் துறை அமைச்சர் முல்லா அப்துல் லத்தீப் மன்சூர் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், "குனார் நதியில் புதிய அணை கட்டப்படும். இந்த நதியின் மீது ஆப்கானிஸ்தான் மக்களுக்கு முழு உரிமை இருக்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் நீர் வளம், எரிசக்தி துறை செய்தித் தொடர்பாளர் மதியுல்லா அபித் கூறியதாவது: குனார் நதியில் புதிய அணையை கட்ட திட்டமிட்டு உள்ளோம். இதற்கான களஆய்வு நடத்தப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு இருக்கிறது. புதிய அணையின் மூலம் ஆப்கானிஸ்தானில் 1,50,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். மேலும் 45 மெகாவாட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்படும். இந்த அணையால் நாட்டின் உணவு தானிய உற்பத்தி, மின் உற்பத்தி கணிசமாக அதிகரிக்கும்.

குனார் நதி தொடர்பாக ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் இடையே எந்த ஒப்பந்தமும் கையெழுத்தாகவில்லை. எனவே எவ்வித பிரச்சினையும் இன்றி நதியில் பிரம்மாண்ட அணையை கட்டுவோம். பாகிஸ்தானுக்கு செல்லும் தண்ணீர் தடுத்து நிறுத்தப்படும். இவ்வாறு மதியுல்லா அபித் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஆப்கான் அரசுவட்டாரங்கள் கூறுகையில், ''அண்மையில் இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் மூண்டது. இதன்காரணமாக சிந்து நதி ஒப்பந்தத்தை இந்தியா ரத்து செய்தது. இதே பாணியில் குனார் நதியில் புதிய அணையை கட்டி பாகிஸ்தானுக்கு செல்லும் தண்ணீரை தடுக்க உள்ளோம்'' என்றன.



# மேட்டூர் சிட்கோ தொழிற்சாலையில் ஆசிட் தொட்டி வெடித்து வடமாநில தொழிலாளர்கள் இருவர் படுகாயம்

மேட்டூர், அக்.26-

மேட்டூர் அருகே சிட்கோ தொழிற்சாலையில் ஆசிட் தொட்டி வெடித்ததில் வட மாநில தொழிலாளர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர். மேட்டூர் அருகே கருமலை கூடல் சிட்கோ தொழிற்பேட்டையில் 200க்கும் மேற்பட்ட ரசாயணம், பிளாஸ்டிக் குழாய் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. இந்த தொழிற்பேட்டையில் சேலம் கன்னங்குறிச்சி பகுதியைச் சேர்ந்த பாலமுருகன் (30) என்பவர் மெக்னீசியம் சல்பேட் தயாரிக்கும் தொழிற்சாலை நடத்தி வருகிறார். இந்த தொழிற்சாலையில் 30க்கும் மேற்பட்ட வட மாநில தொழிலா ளர்கள் வேலை செய்து வருகின்றனர்.

இதனிடையே, தொழிற்சாலையில் மெக்னீசியம் அரைக்கும் தொட்டி பழுதடைந்து இருந்ததை, சரி செய்யும் பணியில் வட மாநிலத் தொழிலாளர்கள் ஈடுபட்டனர். அப்போது எதிர்பாராத விதமாக திடீரென ஆசிட் தொட்டி வெடித்து விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் பிஹார் மாநிலத்தைச் சேர்ந்த ராகேஸ் ராம் (38), சர்வன் பஸ்வான் (38) ஆகிய இருவரும் படுகாயம் அடைந்தனர்.

அப்போது, பணியில் இருந்த சக தொழிலாளர்கள் காயமடைந்த இருவரை மீட்டு, இரு சக்கர வாகனத்தில் தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு துறையினர் தொழிற் சாலையில் தீ எரிந்த இடத்தை தண்ணீர் அடித்து அணைத்தனர். இந்த விபத்தில் தொழிற்சாலையில் பெரும்பாலான பகுதிகள் சேதம் அடைந்தது. சம்பவ இடத்திற்கு சென்ற கருமலைக்கூடல் போலீஸார் விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

முதற்கட்ட விசாரணையில், மெக்னீசியம் சல்பேட் தயாரிக்கும் தொட்டியில் 4 டன் அளவுக்கு மெக்னீசியம் ஆக்சைடு கலந்த மண் மற்றும் சல்ஃபுரிக் ஆசிட் சேர்த்து வைத்துள்ளனர். அப்போது, தொட்டிக்கு செல்லும் குழாயில் ஏற்பட்ட பாதிப்பை தீயில் காட்டி சரிசெய்யும் போது ஆசிட் தொட்டி வெடித்துள்ளதாக கூறப்படுகிறது என போலீஸார் தரப்பில் தெரிவிக்க ப்பட்டுள்ளது. தொடர்ந்து, போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திமுக, விசிகவை பிரிக்க முடியாது: திருமாவளவன்



தஞ்சாவூர், அக்.26-

தஞ்சாவூரில் நேற்று கட்சி நிர்வாகி இல்ல நிகழ்ச்சியில் பங்கேற்ற விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் பேசியதாவது: திமுகவுக்கும், விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கும் இணக்கமான உறவு உள்ளது.

திருமாவளவனுக்கு எதிராக விமர்சனம் செய்தால், விசிகவினர் ஆத்திரப்படுவார்கள். அதன் மூலம் இரு கட்சிகளுக்கு இடையிலான உறவை சிதைத்துவிடலாம் என பலர் கருதுகின்றனர். அது ஒருபோதும் நடக்காது.

ஏனென்றால், நாங்கள் பெரியார், அம்பேத்கர், காரல் மார்க்ஸ் கொள்கைகளைப் பின்பற்றி வருகிறோம். அதே கொள்கைகளை திமுகவும் பின்பற்றி வருவதால், எங்களுக்குள் எந்தப் பிரிவினையும் ஏற்படாது. இவ்வாறு அவர் பேசினார்.

# நேர்மையாக வரி செலுத்துவோரை கண்ணியமாக நடத்த வேண்டும்: ஜிஎஸ்டி அதிகாரிகளிடம் நிதியமைச்சர் வலியுறுத்தல்

புதுடெல்லி, அக்.26-

நேர்மையாக வரி செலுத்துவோரிடம் சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) அதிகாரிகள் கண்ணியத்துடனும், பரிவுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வலியுறுத்தி உள்ளார்.




உத்தர பிரதேச மாநிலம் சிஜிஎஸ்டி கட்டிட திறப்பு விழாவில் கலந்து கொண்ட அவர் இதுகுறித்து மேலும் பேசியதாவது: ஜிஎஸ்டி அதிகாரிகளின் தவறான நடத்தை, கடமை தவறுதல் அல்லது நெறிமுறையற்ற போக்கை எந்த வகையிலும் சகித்துக் கொள்ள முடியாது. மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்தின் (சிபிஐசி) அதிகாரிகளுக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கைகள் சரியான நேரத்தில் முடிக்கப்பட வேண்டும்.

வரி நிர்வாகத்தின் இலக்கு என்பது நேர்மையான வரி செலுத்துவோரின் வாழ்க்கையை எளிதாக்குவதுதான். ஜிஎஸ்டி அதிகாரிகள் வகுக்கப்பட்ட வரி விதிப்பு விதிகளைப் பின்பற்றி கருணையுடனும், மரியாதையுடனும் வரி செலுத்துவோரிடம் நடந்து கொள்ள வேண்டும்.

ஜிஎஸ்டி அதிகாரிகளைப் பொருத்தவரையில் கண்ணியத்துடன் இருப்பது முக்கியம். அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி என்பது விகிதங்கள், அடுக்குகள், எளிமைப்படுத்துதல் மட்டுமல்ல. வரி செலுத்துவோருக்கு வித்தியாசமான உணர்வை தர வேண்டும்.

நேர்மையான வரி செலுத்துவோர் கவுரவமாக நடத்தப்பட வேண்டும் என்று வாதிடப்படும் அதே வேளையில் கருப்பு ஆடுகளை சட்டத்தின் முன் நிறுத்த தவறக்கூடாது. அனைவரையும் சந்தேகக் கண் கொண்டு பார்க்க வேண்டாம் என்பதே எனது எண்ணம்.

வரி செலுத்துவோர் மீதான சுமையை குறைக்க விரைவான பதிவு ஒப்புதல்கள் மற்றும் குறைகளை தீர்க்க ஜிஎஸ்டி அதிகாரிகள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசினார்.

# மழையால் பாதிக்கப்படுவோரை தங்க வைக்க சென்னையில் 215 நிவாரண முகாம்கள் தயார்

சென்னை, அக்.26-

வங்கக் கடலில் உருவாகும் புயலை எதிர்கொள்ள சென்னை மாநகராட்சி சார்பில் 215 நிவாரண முகாம்கள் தயாராக இருப்பதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. தற்போது வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது.



இது, மேலும் வலுவடைந்து அக்.27ம் தேதி புயலாக மாறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சென்னை, புறநகர் மாவட்டங்களில் 26ம் தேதி கனமழையும், 27ம் தேதி மிக கனமழையும் பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இந்நிலையில், சென்னையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடுகள் குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: பருவமழை காரணமாக தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரால் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது என முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

மழைநீர் சூழ்ந்து பாதிக்கப்படும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு தேவையான உதவிகளை அளிக்கும் நோக்கில் நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. 215 இடங்களில் நிவாரண முகாம்கள் தயார் நிலையில் உள்ளன. அவற்றில் உணவு, சுகாதார வசதி, குடிநீர் வசதி உள்ளிட்டவை செய்யப்பட்டுள்ளன. நிவாரண மையங்களுக்கு உணவு வழங்க ஏதுவாக 106 மைய சமையல் கூடங்கள் அமைக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளன.

ஏற்கெனவே பெய்த மழையால் பாதிக்கப்பட்ட 4 லட்சத்து 400 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. மாநகராட்சி பகுதிகளில் தேங்கும் மழைநீரை வெளியேற்ற 1,436 மோட்டார் பம்புகளும், 100 எச்பி திறன் கொண்ட 150 மோட்டார் பம்புகளும், மரங்களை அகற்ற 457 அறுவை இயந்திரங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. அக்.17 முதல் 22ம் தேதி வரை 31 மரங்கள் அகற்றப்பட்டுள்ளன.

மாநகராட்சி தொடர்பான புகார்களை 1913 என்ற எண்ணுக்கும், சென்னை குடிநீர் வாரிய புகார்களை 1916 என்ற எண்ணுக்கும் தெரிவித்தால், தேவையான உதவிகளை பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாநகராட்சி சார்பில் 22 ஆயிரம் பேரும், சென்னை குடிநீர் வாரியத்தில் 2,149 களப்பணியாளர்களும் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000